

இராணிப்பேட்டை முத்துக்கடை பேருந்து நிலையத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி 5 புதிய மினி பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர். ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழுதலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகரமன்றத் தலைவர்கள் சுஜாதா வினோத், ஹரிணி தில்லை, நகரச் செயலாளர் பி.பூங்காவனம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.வினோத் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் இசட்.அப்துல்லா, மாவட்ட பிரதிநிதி எஸ். கிருஷ்ணன், நகர நிர்வாகிகள் தாமோதரன், வையாபுரி, ஏ.அமித், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் எல்லப்பன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எம்.ஜெயக்குமார், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மகி, நகர இளைஞர் அணி அமைப்பாளர் அஜ்மல், நகர மாணவரணி அமைப்பாளர் பாலாஜி மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தேனாம்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட

# குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்குத் தடுப்பு சிறப்பு மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

சென்னை, ஜூன்.18-

பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், சித்தரஞ்சன் சாலையில் உள்ள குழந்தைகள் மையத்தில் வயிற்றுப்போக்கு தடுப்பு சிறப்பு மருத்துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (16.06.2025) தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், முறையாக கைகழுவுவதன் அவசியம், கைகழுவும் முறை மற்றும் ஓ.ஆர்.எஸ். உப்பு சர்க்கரை கரைசல் தயாரிக்கும் முறை குறித்த விளக்க நிகழ்ச்சியினைப் பார்வையிட்டார்.

தொடர்ந்து, ஓ.ஆர்.எஸ். கரைசல் தயாரிக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் முறை குறித்த பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலான பதாகையினை வெளியிட்டார்.

மேலும், குழந்தைகள் மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு 2 ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகள், 14 துத்தநாக மாத்திரைகள், விழிப்புணர்வு கையேடு மற்றும் பரிசு ஆகியவை அடங்கிய மருத்துவப் பெட்டங்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மயிலாப்பூர் சட்டன்ற உறுப்பினர் த.வேலு, மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தேசிய நலவாழ்வுக் குழும இயக்குநர் மருத்துவர் அருண் தம்புராஜ், பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மருத்துவர் டி.எஸ். செல்வவிநாயகம், நிலைக்குழுத் தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, மாமன்ற உறுப்பினர் கி.மதிவாணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மாவட்டத்தில் தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில்

# கலைஞர் பிறந்தநாளையொட்டி மண்டல அளவிலான கருத்தரங்க கூட்டம்!

தருமபுரி, ஜூன் 18 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு மண்டல அளவிலான மாபெரும் கருத்தரங்ககூட்டம் அரூர் என்.என். மஹால் திருமணமண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஏ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. தலைமை வகித்தார். கழக துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர்.செல்வராஜ் எம்.பி., கழக மாணவர் அணி செயலாளர் ஆர்.ராஜிவ்காந்தி, தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் கே.திருமால் வரவேற்புரையாற்றினார்.

மாநில நிர்வாகிகள் மருதூர் ஏ.இராமலிங்கம், வி.பி. இராஜன், திப்பம்பட்டி ஆறுச்சாமி, செ.புஷ்பராஜ், சா.இராசேந்திரன்,பி. துரைசாமி, ஊட்டி மூ.பொன்தோஸ், மு.பரமானந்தம், மயிலை சி.தசரதன், S.மாரியப்பன் கென்னடி,தகடூர் கொ.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்நி

கழ்வில் தருமபுரி மேற்கு மாவட்ட அதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் குபேந்திரன், கு.மதி, இரா. வேடன், மா.கணேசன், அ.சாமி, ப.முனிரத்தினம், கா.சரவணன், ப.ராமச்சந்திரன், சொ.பாண்டியன், தருமபுரி கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் டி.பி.சின்னசாமி,என். பூபால், எஸ்.ராஜேந்திரன், கே.வெங்கடாசலபதி, சி. பிரபு, அம்பேத்கர், ஆர். வெங்கடேசன். ஐ.டி.விங் தமிழழகன் மற்றும் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி பொறுப்பாளர்கள் மற்றும் 2000க்கும் மேற்பட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். தருமபுரி கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகி என். ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

### கருஞ்சட்டைப் பதிப்பகம் நடத்தும்

# தமிழின் சமவுரிமைக்கான போராட்டம் - ஆய்வரங்கம்!

## ப.திருமாவேலன் - ஜெ.ஜெயரஞ்சன் - கருணானந்தம் - மருதையன் - தமிழ் காமராசன் சிறப்புரை!

சென்னை, ஜூன் 18-

கருஞ்சட்டை பதிப்பகம் சார்பில் 'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' ஆய்வரங்கம் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 15.06.2025 ஞாயிறு காலை 10 மணி முதல் 5 மணி வரை நடைபெற்றது

'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' எனும் இவ்ஆய்வரங்க நிகழ்ச்சியில் பெல்.இராசன் வரவேற்புரையும், தொடக்கவுரையை பேராசிரியர் அ.கருணா னந்தம் நிகழ்த்தினர்.

மேலும் இந்நிகழ்ச்சியில், இந்தி ஆதிக்க எதிர்ப்பு தமிழ்மொழி உரிமை: திராவிட இயக்கத்தின் போராட்டமும் பங்களிப்பும் எனும் தலைப்பில் கலைஞர் தொலைக்காட்சி தலைமை செய்தியாசிரியர் ப.திருமாவேலன், 'உருது, இந்துஸ்தானி, இந்தி; இந்திய - இந்து தேசிய வாதத்தின் மத-இன மொழி ஒடுக்கு முறை அரசியல்' எனும் தலைப்பில் தோழர் மருதையன்; 'இந்தி மொழி ஆதிக்கமும் மொழிகள் சம உரிமையும், இந்திய அரசியலமைப்பும் - அதற்கு அப்பாலும்' என்ற தலைப்பில் சுகுணா திவாகர்; 'மொழி உரிமைக்கான போராட்டத்தில் இருமொழிக் கொள்கை; தமிழ்நாட்டின் அனுபவம்' எனும் தலைப்பில் தமிழ் காமராசன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்ச்சியில் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் நிறைவுரை ஆற்றினார்.

'தமிழின் சமவுரிமைக்கான போராட்டம் ஆய்வுக் கட்டுரைகள்' நூலை பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன் வெளியிட, பேராசிரியர் கருணானந்தம் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் பதிவு செய்து பங்கு கொண்ட அனைவருக்கும் 'தமிழின் சம உரிமைக்கான போராட்டம்' - ஆய்வுக் கட்டுரைகள் வழங்கப்பட்டன.

அறம் மதி.முத்துக்குமார் தொகுப்புரை வழங்க இக்லாஸ் உசேன் நிகழ்ச்சியை கருஞ்சட்டைப் பதிப்பகம் சார்பில் ஒருங்கிணைத்திருந்தார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், வானூர் சட்டமன்றத் தொகுதி, கண்டமங்கலம் மத்திய ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்ட விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் போக்குவரத்துத் துறை சார்பில் , புதிய விரிவான மினிபஸ் திட்டத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொடியசைத்து துவக்கி வைத்தார் . உடன் சேர்மன் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர் மதியழகன், சுதாகர், அரசு போக்குவரத்துக் கழக பொதுச் செயலாளர் ராஜ செல்வம், நகர நிர்வாகிகள் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், அ.மரியராசு, L.திருமாறன், எஸ்.ஆர்.எஸ்.மதன்குமார், மகளிர் அணி வகிதா ரகுமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### டெல்லியில் 'மதராசி கேம்ப்' தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க

# முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50 லட்சம் ஒதுக்கீடு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூன்.18-**

**டெல்லியில், மதராசி கேம்ப் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

டெல்லி, ஜங்புரா பகுதியில், மதராசி கேம்ப் எனப்படும் குடிசைப் பகுதியில் தமிழர்களின் வீடுகள் இடித்து அகற்றப்பட்டுள்ள சூழ்நிலையில், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதை உறுதி செய்திடத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வலியுறுத்தி டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்களுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தினை கடந்த 13-6-2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன் ஆகியோர், டெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா அவர்களை நேரில் சந்தித்து வழங்கியதோடு, கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை நிறை வேற்றித் தருமாறு வலியுறுத்தினர்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியிருந்த கடிதத்தில், பாதிக்கப்பட்ட 370 தமிழர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் பின்வரும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு டெல்லி முதலமைச்சர் அவர்களை தனது கடிதத்தில் கோரியிருந்தார்:

பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) அடுக்குமாடிக் குடியிருப்புகளை முழுமையாகப் பூர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட உரிமை பெற்ற 189 குடும்பங்களுக்கு வழங்கிடவும், விரைவான சமூக உள்கட்டமைப்பு மற்றும் பிரத்யேகமான போக்குவரத்து சேவைகளை வழங்கிடவும் வேண்டும்.

மீதமுள்ள 181 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வருமான உச்சவரம்பு, குடியிருப்புத் தேவைகள் மற்றும் வைப்புத்தொகை நிபந்தனைகளில் சிறப்புத் தளர்வுகளை வழங்கி, பொருளாதார ரீதியாக நலிவடைந்த பிரிவிற்கான (EWS) வீடுகளைப் பெறுவதற்கான தகுதியை விரிவுபடுத்திட வேண்டும்.

G-7-ல் தற்காலிக டெல்லி தமிழ்க் கல்விச் சங்கத்தின் (Delhi Tamil Education Association-DTEA) பள்ளியை அனுமதிப்பதன் மூலம் தற்காலிக தமிழ் வழிப் பள்ளியை நிறுவுதல், உடனடி சேர்க்கை மற்றும் சிறப்புப் போக்குவரத்து வசதிகளுடன் அல்லது நிரந்தர வசதிகள் தயாராகும் வரை ஒதுக்கப்பட்ட இருக்கைகள் மற்றும் இடைக்கால போக்குவரத்து வசதியுடன் அருகிலுள்ள டெல்லி மாநகராட்சிப் பள்ளியில் தமிழ் பயிற்றுவிப்பை அங்கீகரித்தல் போன்றவற்றைச் செய்திட வேண்டும்.

இடம்பெயர்ந்த பெண்களுக்கு இலக்குடன் கூடிய தொழில் பயிற்சி மற்றும் குறு நிறுவன மானியங்கள் மூலம் வாழ்வாதார ஆதரவைத் திரட்டிட வேண்டும்.

இந்தச் சூழ்நிலையில், டெல்லி நிருவாகம் இந்தப் பிரச்சினையை மனிதாபிமான முறையில் அணுகி, பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும், இடம்பெயர்ந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் சமூகமான, கண்ணியமான மறுவாழ்வை உறுதி செய்வதற்கு அனைத்து வகையிலும் தமிழ்நாடு அரசு உதவத் தயாராக இருப்பதாகவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், டெல்லியில் பாதிக்கப்பட்ட 370 தமிழர்களின் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டெ டுக்கும் வகையில், சிறப்பு நிகழ்வாக வீடுகளை இழந்தவர்களுக்கு ஒரு முறை நிதியுதவியாக தலா 8 ஆயிரம் ரூபாய் வழங்கிடவும், அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, சமையல் எண்ணெய், மசாலாப் பொருட்கள் அடங்கிய 4 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கிடவும் ஏதுவாக, நேற்று (16-6-2025) முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கோனை ஊராட்சி வடகால் கிராமத்தில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 81.66லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார்ச் சாலை அமைப்பதற்கு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பணியை தொடங்கி வைத்தார். அருகில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றியச் செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.